7.3.2024 ம.சா.1 ரமேஷ் (எ) காசி (பக்கம் 4)

எச்.எம்.ஒ.பி.338/19

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி=

எங்களது திருமணம் பெரியோர்களால் நிச்சியிக்கப்பட்டது தான்.எங்கள் குடும்பத்தை பற்றி விசாரித்து தான் எதிர்மனுதாரர் திருமணம் செய்துவைத்தார்கள் என்றால் சரிதான். எங்களுடைய குடும்ப சூழ்நிலை தெரிந்து தான் எதிர்மனுதாரரை திருமணம் செய்துவைத்தனர் என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பு நான் சாயபட்டறையில் வேலை பார்த்து வந்தது எதிர்மனுதாரர் குடும்பத்திற்கு தெரியும் என்றால் சரிதான். சாயபட்டறையில் வேலை பார்த்து வருகின்ற காரணத்தினால் தான் எதிர்மனதாரர் என்னை மதிக்கவில்லை என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னை அவருக்கு ஏற்ற ஜோடி இல்லை என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. திருமணம் முடித்து 2 வருட காலம் நாங்கள் சேதர்ந்து வாழ்ந்தோம். எங்களுக்கு ஒரு மகன் உள்ளார். எதிர்மனுதாரர் கர்ப்ப காலத்திலும் எங்களோடு கூட்டு குடும்பமாக தான் இருந்தார் என்றால் சரிதான்.அந்த சமயம் எங்களுக்குள் எந்த பிர்சினையும் கிடையாது. எதிர்மனுதாரர் என்னுடன் வாழந்த காலத்தில் நல்ல மனைவியாகவோ என்னுடைய தாயாருக்கு நல்ல மருமகளாக நடந்துவந்தார் என்றால் இல்லை. காஞ்சிபுரம் சி.எஸ்.ஐ மருத்துவமனியல் என்னுடைய மகன் பிற்ந்தார்.மருத்துவமனையில் எங்களுக்குள் எந்த பிரச்சினை ஏற்படவில்லை. மருத்துவமனையில் வைத்து நான் எதிர்மனுதாரரை வைத்து தாக்கவில்லை. நான் இவ்வழக்கிற்காக வேண்டி எதிர்மனுதாரரை அடிக்கவில்லை என்று பொய் சொல்கிறேன் என்றும் அவர் மருததவமனையில் பிரசவித்து இருந்தபோதும் நான் எதிர்மனுதாரரை தாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் எங்களுடைய குழந்தைக்காக வேண்டி நான் செய்து வந்த அனைத்து கொடுமையும் சகித்து வந்தார் என்றால் நான் எந்தவித கொடுமையும் செய்யவில்லை. குழந்தை பிற்ந்து 6 மாத காலம் அவருடைய வீட்டில் தான் இருந்தார். நான் அந்த சமயம் எதிர்மனுதாரரை அடிக்கடி சென்று பார்த்து வந்தேன்.அப்போது எங்களுக்குள் எந்த பிரச்சினையும் கிடையாது. 6 மாத காலம் கழித்து எதிர்மனுதாரரையும் குழந்தையும் எங்களுடைய வீட்டிற்கு அழைத்து வந்தேன். குழந்தையை எங்கள் வீட்டிற்கு அழைத்து வந்தபோது என்னுடைய தாயார் சொல்லி எதிர்மனுதாரர் குடும்பத்திடம் என்ன நகை குழந்தைக்கு போடப்பட்டுள்ளது என்ற விவரத்தை கேட்டு

தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் வீட்டார் குழந்தைக்கு எந்தவித நகையும் அணிவிக்காத காரணத்தினால் எதிர்மனுதாரரை திட்டி அசிங்கப்படுத்தினேன் என்றால் சரியல்ல. அப்போதும் எதிர்மனுதாரர் குழந்தைக்காக வேண்டி எல்லாவற்றையும் சகித்துகொண்டிருந்தார் என்றால் சரியல்ல. குழந்தைக்கு மொட்டை அடிக்க வேண்டி எங்கள் வீட்டிற்கு வந்து சில காலங்களில் முடிவு எடுத்தனர். குழந்தைக்கு மொட்டை அடிக்க வேண்டிய விவரத்தை 2 தினங்களுக்கு முன்னர் தான் நான் சொன்னேன் என்றால் சரியல்ல. எதிர்மனதாரர் வீட்டாருகங்கு தெரிய கூடாது என்ற நோக்கத்தில் தான் நான் உடனடியாக குழந்தைக்கு மொட்டை அடிக்க ஏற்பாடு செய்தேன் என்றால் சரியல்ல. குழந்தைக்கு மொட்டை அடித்த 11 நர்டகளுக்குள் நாங்கள் தனிக்குடித்தனம் சென்றோம். அப்போதும் எதிர்மனுதாரர் குடும்பத்தாருக்கு இது குறித்து விவரத்தை தெரிவித்தும் அவர்கள் அங்கு வந்திருந்தார்கள். எதிர்மனுதாரருக்கும் திடீரென்று தான் தனிக்குடித்தனம் நான் அமைக்க இருந்த விவரத்தை தெரியபடுத்தினேன் என்றால் சரியல்ல. தனிக்குடித்தனம் 9 மாதங்கள் தான் நீடித்தது. அங்கும் எதிர்மனுதாரர் டார்ச்சர் செய்து தான் வந்தார். நான் இவ்வழக்கிற்காக வேண்டி எதிர்மனுதாரர் டார்ச்சர் செய்ததாக பொய் சொல்கிறேன் என்றும் நாங்கள் ஒன்றாக வாழ்ந்த 9 மாத காலத்தில் சந்தோசமாக தான் வாழ்ந்துவந்தோம். ஜுன் மாதம் இறுதி வாரத்தில் 2012 ம் ஆண்டு எதிர்மனுதாரரை அவருடைய பெற்றோர் வீட்டிற்கு சென்று விட்டு வந்தேன் என்றால் சரியல்ல. எந்த காரணமும் இல்லாமல் தான் எதிர்மனுதாரர் அவர் வீட்டிற்கு தானாக சென்றார். 2 மாத காலம் எதிர்மனுதார் அவருடைய பெற்றோர் வீட்டில் வசித்து வந்தார். அந்த 2 மாத காலத்தில் எதிர்மனுதாரர் வீட்டில் பஞ்சாயத்து பேசப்பட்டது. அந்த பஞ்சாயத்தில் புது வீட்டு பார்த்துவிட்டு எதிர்மனுதாரரை அழைத்து செல்வதாக நான் சொல்லியிருந்தேன் என்றால் சரிதான். வைகுண்ட பெருமாள் தெருவில் ஒரு வீட்டை வாடகைக்கு பார்த்தேன். எதிர்மனுதாரரை அழைத்து போது அவரும் வந்து பார்த்தார். எதிர்மனுதாரர் பெற்றோரும் , அவருடைய தங்கையும் வீட்டை பார்த்துவிட்டு வீடு பாதுகாப்பு இல்லாமல் இருப்பதாக சொல்லி வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். அதன் பிறகு நான் வேறு எந்த வீடும் பார்க்கவில்லை அவர்களிடமே வீடு பார்க்க சொல்லிவிட்டேன். நான் இவ்வழக்கிற்காக வேண்டி அவ்வாறு பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு 2 தங்கைகள் உள்ளனர். எதிர்மனுதாரரின் முதல் தங்கைக்கு ஒரு வசதி படைத்த வீட்டில் திருமணம் செய்ய ஏற்பாடு செய்யபட்டிருந்தது என்றால் சரிதான். அவருடையள முத்த சகோதரிக்கு வசதி படைத்த நபர் வீட்டில

திருமணம்' செய்து வைத்தால் என்னை மதிக்க மாட்டார் என்று பிர்சினை செய்தேன் என்றால் சரியல்ல.அதன் காரணமாக தான் எதிர்மனுதாரரை குடும்பம் நடத்த அழைத்து செல்லவில்லை என்றால் சரியல்ல. இது தொடர்பாக எனக்கும் எதிர்மனுதாரர் தங்கைக்கும் பிரச்சினை நடந்தது என்றால் சரியல்ல. அந்த தகராறின் போது அவருடைய தந்தையை அடித்துவிட்டேன் என்றும் எதிர்மனுதாரர் வாழ்க்கையை கருத்தில் கொண்டு எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் தவறாகும். எதிர்மனுதாரரின் இரண்டாம் சகோதரி சரோஜாபாய் என்பவர் என் மீது விஷ்னு காஞ்சி கா.நிலையத்தில் ஒரு புகார் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். என்னுடைய குழந்தையை பார்க்க எதிர்மனுதாரர் வீட்டிற்கு சென்றபோது அவருடைய சகோதரி என் மீது கா.நிலையத்தில் புகார் கொடுத்தார். அவருடைய சகோதரியை நான் வழி மடக்கி பிரச்சினை செய்ததாக தான் என் மீது கா.நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். அந்த புகாரின் பேரில் என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கு காஞ்சிபுரம் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் ஆண்டு பட்டிகை எண்.336/13 என்ற வழக்கு தற்போது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கிற்கு பின்னிட்டு எங்கள் சமுதாயத்தை சேர்ந்த பெரியவரான ராதாகிருஷணன் என்பவரை வைத்து பஞ்சாயத்து செயதோம் என்றால் சரிதான். அந்த பஞ்சாயத்தில் நாங்கள் இருவரும் சேர்ந்து வாழ முடிவு எடுக்கப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு சேர்ந்து வாழும் பட்சத்தில் எதிர்மனுதாரர் சகோதரி கொடுத்த குற்ற வழக்கினை வாபஸ் பெறவேண்டும் என்பது என்னுடைய கோரிக்கையாக இருந்தது என்றால் சரிதான்.அதற்கும் எதிர்மனுதாரர் குடும்பம் ஒப்புக்கொண்டனர். அதற்கு பிறகும் நான் சேர்ந்து வாழ தயாராக இல்லாத காரணத்தினால் தான் அந்த குற்ற வழக்கு வாபஸ் பெறபடவில்லை என்றால் சரியல்ல. அதன் பிறகு எதிர்மனுதாரர் என் மீது ஜீவனாம்சம் கோரி காஞ்சிபுரம் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கு தற்போது நிலுவையில் இருந்து தான் வருகிறது. 13 ஆண்டுகளாக எதிர்மனதாரர் அவருடைய தந்தையின் பராமரிப்பில் தான் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. குழந்தை பிறந்த பிறகு தான் அவ்வாறு இருந்து வருகிறார்.

(எதிர்மனுதாரர் வழக்குரைஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக இறுதியாக ஒத்திவைக்கப்படுகிறது)